தமிழ்நாடு சட்ட மன்றம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்ட மன்றத்தின் நாற்பத்தி நான்காவது கூட்டத் தொடர்.

சனிக்கிழமை, 1973 பிப்ரவரி 3.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

1. இரங்கற் குறிப்புகள்

தமிழ்நாடு சட்டப் பேரவையின் உறுப்பினர் திரு. பி. கோபால், தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர் திரு. டி. எஸ். அருணசலம் ஆகியோர் மறைவு குறித்து

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : தமிழ் நாடு சட்டப் பேரவையின் உறுப்பினர் திரு. பி. கோபால் அவர்கள் 1972 டிசம்பர் திங்கள் 28 ஆம் நாளன்று இயற்கையெய்தியது குறித்து ஆழ்ந்த வருத்தத்துடன் மேலவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோபால் 1971 முதல் கோவை மேற்கு சட்ட மன்றத் தொகுதியின் உறுப்பினராக இருந்து வந்துள்ளார்.

சட்ட மன்ற மேலவை உறுப்பினர் திரு. டி. எஸ். அருணசலம் 1973 ஜனவரி 28 ஆம் நாளன்று மறைந்தது குறித்தும் நான் மிக ஆழ்ந்த வருத்தத்துடன் மேலவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1946—52 ஆம் ஆண்டுகளில் திரு டி. எஸ். அருணசலம் திருச்சி-ஸ்ரீரங்கம் நகர்களின் பொது நகர்த் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினராக இருந்து வந்தார். 1957—72 வரை தமிழ் நாடு சட்ட

மன்ற மேலவையின் உறுப்பினராக இருந்து வந்துள்ளார். நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் 1930 ஆம் ஆண்டு முதல் பங்கேற்று ஐந்து முறை சிறை சென்றுள்ளார்.

இந்த உறுப்பினர்களின் மறைவால் துயரில் ஆழ்ந்துள்ள அவர்களது குடும்பத்தினருக்கு மேலவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

மறைந்த இந்த உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(அவையினர் எல்லோரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றார்கள்.)

2. இரங்கற் தீர்மானம்.

தமிழக அரசின் முன்னாள் முதலமைச்சரும் இந்தியாவின் முன்னாள் கவர்னர்-ஜெனரலுமாகிய திரு. சி. இராஜகோபாலாச்சாரி அவர்கள் மறைவு குறித்து

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: தமிழக அரசின் முன்னாள் முதலமைச்சரும், இந்தியாவின் முன்னாள் கவர்னர்–ஜெனரலுமாகிய திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் அவர்களின் மறைவை இம்மன்றத்திற்கு ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரங்கல் தீர்மானத்தை முன்மொழியுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானத்தை முன் மொழிகிறேன் :—

"இந்திய நாட்டின் விடுதலைக்காக தியாகம் செய்த பெருந் தலைவர்களில் முதல் வரிசை வீரராக, தீண்டாமை ஒழிப்பில் வழிகாட்டியாக, சிறந்த ராஜ தந்திரியாக, ஆழ்ந்து பரந்த கூர்மையான நுண்ணறிவு பெற்ற தீர்க்கதரிசியாக, அஞ்சா